# மலையக விடுகதைகள்: பதுளை மாவட்டம் பசறை பிரதேச விடுகதைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

Eastern University, Sri Lanka
Academic Affairs Department
27 JAN 2020
Vantharumoolai
Chenkalady

சந்திரமோகன் கோகிலவாணி

EU/IS/2013/AC/145

CS 5295

LIBRARY
09 OCT 2020

FAC 829
Project Report
Library - EUSL

மொழித்துறை,

கலை கலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்,

இலங்கை.

2019

PROCESSED
MAIN LIBRARY, EUSL

# முன்னுரை

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் மொழித்துறையில் தமிழ்ச் சிறப்புக் கற்கை இளங்கலைமாணி இறுதி அரையாண்டுத் தேர்வின் ஒரு பகுதியை பூர்த்தி செய்வதற்காக "மலையக விடுகதைகள்: பசறை பிரதேச விடுகதைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு" எனும் தலைப்பில் இவ் ஆய்வு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் பல நாட்டாரியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் மலையக நாட்டார் இலக்கியங்கள் குறித்த ஆய்வுகள் மிகவும் அரிதே. குறிப்பாக மலையக விடுகதைகள் குறித்து ஒரு சில ஆய்வுக் கட்டுரைகள் பிரசுரமாகி இருந்தாலும் மலையக விடுகதைகள் சார்ந்த முழுமையான ஆய்வு நூல்கள் இன்றளவும் வெளியிடப்படவில்லை. எனவே இவ் ஆய்வானது பதுளை மாவட்டம் பசறை பிரதேசத்தில் தொகுக்கப்பட்ட விடுகதைகளை ஆதாரமாக் கொண்டு மலையக விடுகதைகள் குறித்த பல விடயங்களை ஆராயும் "மலையக விடுகதைகள்: பசறை பிரதேச விடுகதைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு" எனும் தலைப்பிலான ஆய்வாகக் காணப்படுகின்றது.

மலையத்தில் நாட்டாரியலானது பல்வேறுபட்ட காரணங்களால் அழிவடைந்து கொண்டு வருகின்றது. அதன் ஒரு கூறான மலையக விடுகதைகளைப் பொறுத்தவரையில் இன்றைய சந்ததியினர் மத்தியில் மலையக விடுகதைகள் குறித்த அடிப்படை அறிமுகம் மற்றும் விளக்கம் இல்லாத நிலையே காணப்படுகின்றது. பழைய தலைமுறையினரின் இறப்பு வீதம், புதிய தலைமுறையின் தொழில்நுட்ப ரீதியிலான எழுச்சி, கல்வி, மலையகத்தின் மரபு குறித்தான அக்கறையின்மை போன்ற பல காரணங்களாலும், இதுவரைக் காலமும் சேகரித்து ஆவணப்படுத்தப்படாமையினாலும் பல விடுகதைகள் அழிந்து போய் விட்டன. விடுகதைகள் மலையக வரலாறு மற்றும் மலையக மக்களின் வாழ்வியலுக்கான சான்றுகள். இவற்றை தொகுத்து பாதுகாக்க வேண்டியது அவசியமானதாகும். இவ்வாறு மலையக மக்களின் விடுகதைகளை தொகுப்பதும், மலையக விடுகதைகளின் சிறப்பம்சங்கள் மற்றும் தற்கால நிலை குறித்த ஆய்வு முயற்சியாகவே இவ் ஆய்வு காணப்படுகின்றது.

இவ்வாய்வானது கள ஆய்வின் போது சேகரிக்கப்பட்ட விடுகதைகளையும், உலகளாவிய ரீதியில் நாட்டாரியல் மற்றும் விடுகதைகள் குறித்து வெளிவந்த நூல்கள், கட்டுரைகளையும் ஆதாரமாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது. அந்தவகையில் ஆறு அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டு இவ் ஆய்வு முயற்சியானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலாம் அத்தியாயம் ஆய்வு அறிமுகமாகவும், இரண்டாம் அத்தியாயம் விடுகதைகள் குறித்த அறிமுகமாகவும், மூன்றாம் அத்தியாயம் மலையக விடுகதைகளில் பிரதிபலிக்கப்படும் மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்கள் பற்றியும் நான்காம்

அத்தியாயம் மலையக விடுகதைகளின் வடிவமைப்பு மற்றும் மொழிப்பயன்பாடு பற்றியும் ஐந்தாம் அத்தியாயம் மலையக விடுகதைகளின் பயில்வு நிலை பற்றியும் ஆராய்வதோடு ஆறாம் அத்தியாயம் தொகுப்பும் மதிப்பீடாகவும் காணப்படுகின்றது. இறுதியாக பின்னிணைப்பில் கள ஆய்வில் சேகரிக்கப்பட்ட விடுகதைகள் அவற்றின் கருப்பொருள் ரீதியில் பிரிக்கப்பட்டு அட்டவணை படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாய்வின் மூலம் மலையகத்தில் விடுகதைகளின் தோற்றம், விடுகதைகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள், வாழ்வியல் வெளிப்பாடு, மலையக விடுகதைகளின் வடிவமைப்பு மற்றும் மொழிப்பயன்பாடு, விடுகதைகளின் முக்கியத்துவம், தற்கால நிலை மற்றும் மலையக விடுகதைகளை பாதுகாப்பதற்கான பரிந்துரைகள் போன்ற பல விடயங்கள் குறித்து அறிந்து கொள்ள முடியும். அத்துடன் அழிந்து கொண்டு வரும் மலையக விடுகதைகளை தெரிந்து கொள்வதுடன் ஆவணப்படுத்தவும் இவ்வாய்வு பேருதவி புரியும்.

ஆய்வாளர்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| உறுதியுரை | i |
| நன்றியுரை | ii |
| முன்னுரை | iii |
| பொருளடக்கம் | v |
| **அத்தியாயம்: ஒன்று** | |
| 1.0 ஆய்வு முன்மொழிவு | 1 - 5 |
| **அத்தியாயம்: இரண்டு** | |
| 2.0 விடுகதைகள் அறிமுகம் | |
| 2.1 நாட்டாரியல் அறிமுகம் | 6 - 17 |
| 2.2 மலையகம் அறிமுகம் | 17 - 23 |
| **அத்தியாயம்: மூன்று** | |
| 3.0 மலையக விடுகதைகளில் வெளிப்படுத்தப்படும் வாழ்வியல் அம்சங்கள் | 24 - 61 |
| **அத்தியாயம்: நான்கு** | |
| 4.0 மலையக விடுகதைகளின் வடிவமைப்பும் மொழிப்பயன்பாடும் | |
| 4.1 மலையக விடுகதைகளின் வடிவமைப்பு | 62 - 95 |
| 4.2 மலையக விடுகதைகளில் மொழிப்பயன்பாடு | 95 - 106 |
| **அத்தியாயம்: ஐந்து** | |
| 5.0 மலையக விடுகதைகளின் பயில்வு நிலை | 107 - 128 |
| **அத்தியாயம்: ஆறு** | |
| தொகுப்பும் மதிப்பீடும் | |
| 6.1 தொகுப்பு | 129 - 131 |
| 6.2 மதிப்பீடு | 132 - 136 |
| உசாத்துணைகள் | |
| பின்னிணைப்பு 01 – தகவலாளர்கள் விபரப்பட்டியல் | |
| பின்னிணைப்பு 02 – விடுகதைகள் | |
| பின்னிணைப்பு 03 – புகைப்படங்கள் | |